சுற்றறிக்கை இலக்கம்: 02/2003

எனது இலக்கம்: M10/பல/ம/19/2002

பதிவாளர் நாயகம் திணைக்களம்,

கொழும்பு 03.

2003.04.10

பிரதேச செயலாளர் / மாவட்டப் பதிவாளர்

………………………………………………………………………………

**முஸ்லிம் ஒருவரின் மரணத்தைப் பதிவு செய்யும் போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்த்தல்**

---

இஸ்லாமிய மார்க்க போதனைகள் மற்றும் சம்பிரதாயங்களுக்கு இணங்க, ஒரு முஸ்லிம் மரணமடைந்தால், அந்த உடலின் இறுதிச் சடங்குகளை மிக விரைவாக நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும்.

02. எனினும், சில சந்தர்ப்பங்களில் மரணத்தைப் பதிவு செய்வதற்காக பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர் ஒருவரிடம் செல்லும் போது, அப் பதிவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளைத் துரிதமாகவும் உரிய நேரத்திலும் மேற்கொள்ளாத காரணத்தினால், மரணமடைந்தவரின் உறவினர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கும் சிரமங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளதாகத் தெரியவருகிறது. சட்டப்பூர்வமாகத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்த போதிலும், மரணத்தைப் பதிவு செய்து அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் தடையே இதற்குப் பிரதான காரணமாகும்.

03. குறிப்பாக வார இறுதி நாட்கள், பொது விடுமுறை நாட்கள் மற்றும் இரவு நேரங்களில், மரணத்தைப் பதிவு செய்வதற்குப் பொறுப்பான பதிவாளர்கள் தமது கடமைகளை நிறைவேற்ற முன்வராத காரணத்தினால், மரணமடைந்த ஒரு முஸ்லிமின் ஜனாஸாவை (உடலை) அடக்கம் செய்ய முடியாமல் உறவினர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

04. எனவே, இது தொடர்பாக உங்கள் பிரதேசத்திலுள்ள பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர்களைத் தெளிவுபடுத்தி, முஸ்லிம் ஒருவரின் மரணத்தைப் பதிவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

(ஒப்பம்)

பதிவாளர் நாயகம்

பிரதிகள்:

1. தலைவர், இலங்கை முஸ்லிம் ஜனாஸா (இறுதிச் சடங்கு) சேவை அமைப்பு - உங்கள் கடித இலக்கம் 145/5/69(vl) மற்றும் 2002.12.05 திகதியிட்ட கடிதத்துடன் தொடர்புடையது.

2. செயலாளர், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - உங்கள் கடித இலக்கம் MA/LA/P/I/1-1v-1v மற்றும் 2003.03.04 திகதியிட்ட கடிதத்துடன் தொடர்புடையது.